சேத்தூர் 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் வேறு மாவட்டங்கள் என்று சொல்லி, மருந்தகத்திற்கு வருகின்ற கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முடியாது என்று யாரும் மறுக்கமாட்டார்கள். அப்படி யாரும் மறுத்தார்கள் என்று குறிப்பிட்ட நிகழ்வுகளை என்னிடம் தெரிவித்தால் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் உறுப்பினர் அவர்கள் அதுபற்றி வற்புறுத்துவார்களானால், அதற்கான கோரிக்கையை உரிய முறையில் அரசுக்கு அனுப்பினால் அதனை தக்க நேரத்தில் கவனித்து அரசாங்கத்தினுடைய நிதி நிலைமைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10-00 மணி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் ஒப்புதலுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

**கால்நடை மருத்துவமனை.**

*3368. **திரு. ஏ. சுப்பு :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மங்களபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. சுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மங்களபுரம் என்னுமிடத்தில், கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான இடவசதியும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் பங்குத் தொகையும் தர தயாராக இருப்பதால், அங்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். க. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்ட ஊராட்சி ஒன்றியம் நிதி ஒதுக்கிட தயாராக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். ஆனால்

அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் ஊராட்சி ஒன்றியத்தின் மூல மாக அரசு பெறவில்லை. அப்படிப் பெறப்பட்டால் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் போட்டு, அதற்கான மனுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மங்கள புரத்திலே அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மலைவாழ் மக்களும் மிகவும் பின்தங்கிய மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே 20,000க்கு மேல் கால்நடைகளும் இருப்பதால், அந்த மங்கள புரத்தைச் சுற்றி 20 கிலோ மீட்டருக்கு மருந்தகங்கள் இல்லாத தாலும், அரசாங்கம் தனி கவனம் செலுத்தி, அங்கே ஒரு கால் நடை மருத்துவமனையை அமைக்க பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக உரிய தீர்மானம் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படிப் பெறுகின்றபோது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கால்நடை மருந்தகம்.

*4206. திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கணை ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசி டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.